## நிர்மாண உத்தரவாத நிதியம் - 2017

---

நிர்மாண உத்தரவாத நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2010 பெப்ரவரி 08 ஆம் திகதிய 3/136 ஆம் இலக்க நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் 11(ஈ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ் அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிர்மாண உத்தரவாத நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வருமானத்தை இனங்காண்பதற்காக பிரயோகிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களிற்கான முக்கிய கணக்கீட்டுக் கொள்கைளின் கீழ் 2.8 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு ஐயக்கடன்களிற்கான ஏற்பாட்டை கணிப்பீடு செய்வதற்காக கடன்பட்டோரின் உண்மையான கடன் ஆபத்தை (சீஜீஎவ் ஆல் மேற்கொள்ளப்பட்ட கேள்வி) மதிப்பீடு செய்யமால் 1 ஆண்டு தொடக்கம் 5 ஆண்டுகள் வரையான மற்றும் 5 ஆண்டுகளிற்கு மேற்பட்ட நிலுவைக் காலப்பகுதிக்காக முறையே 5 சதவீதம் மற்றும் 100 சதவீதமான தளம்பலற்ற வீதங்களை (flat rates) நிதியம் பிரயோகித்திருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நிலையான வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டி வருமானம் கணிப்பீட்டுத் தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ரூபா 30,851,335 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டின் இறுதியில் உள்ளவாறான ரூபா 2,591,496 செலுத்த வேண்டிய பிடித்துவைத்தல் வரி மீதி கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் மீளளிக்கப்பட்ட பிடித்துவைத்தல் வரிக்கான சீராக்கமொன்றாக ரூபா 8,967,368 தொகை தவறுதலாக மீளாய்வாண்டிற்கான திரண்ட மிகைக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை

கீழே காட்டப்பட்ட ஒவ்வொரு கணக்கு விடயத்திற்கும் எதிராக சுட்டிக்காட்டப்பட்டவாறு அத்தகைய விடயங்களின் சரியான தன்மையை சரிபார்ப்பதற்காக பின்வரும் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்கு விடயங்கள் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| | ரூபா. | |
| நிலையான வைப்புக்கள் மீது பெறவேண்டிய வட்டி | 47,129,645 | கணிப்பீட்டு தகவல்கள் |
| அதிகரித்துக் காட்டப்பட்ட நிலையான வைப்பு வருமானம் | 2,798,932 | ஆதாரப்படுத்தும் ஆவணங்கள் |

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1971 இன் 24 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவு | (i) 2016 ஆம் ஆண்டின் போது ஒப்பந்த அடிப்படையில் 6 உத்தியோகத்தர்களை நிதியம் ஆட்சேர்ப்புச் செய்திருந்த போதிலும் அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக ஒரு உத்தியோகத்தரிற்கு மாத்திரமே உழியர் சேமலாப நிதியப் பங்களிப்பு (ஈபிஎவ்) மேற்கொள்ளப்பட்டிருந்தது.<br><br>(ii) 18 ஆண்டுகளிற்கு மேலாக வேலை செய்கின்ற நிரந்தர உத்தியோகத்தரொருவர் ஆலோசகர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்ட திகதியிலிருந்து ஈபிஎவ் இற்கு பங்களிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2010 பெப்ரவரி 08 ஆம் திகதிய 3/136 ஆம் இலக்க நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் 7 ஆம் பிரிவு | நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பு சபையின் பொறுப்பாளர்களாக செயற்படுவதன் சார்பில் ஏற்பட்ட செலவினத்தை மீள்நிரப்புவதல்லாமல் வழங்கப்படும் சேவைக்காக எதுவித படியையும் நிதியத்திலிருந்து கோருவதற்கு உரித்தற்ற போதிலும் அதற்கு முரணாக மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது தலைவர் படி மற்றும் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் கூட்டங்களிற்கான படிகளாக ரூபா 9,802,100 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

**(இ) பொது முயற்சிகள் சுற்றறிக்கைகள்**

| | | |
|---|---|---|
| (i) | 2006 யூலை 14 ஆம் திகதிய பிஈடி 38 ஆம் இலக்கம் | நிதியமானது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் பெறுமதி சேர் வரி நோக்கத்திற்காக பதிவு செய்திருக்கவில்லை. |
| (ii) | 2016 ஏப்ரல் 29 ஆம் திகதிய பிஈடி 03/2016 ஆம் இலக்கம் | உழைக்கும் போதே செலுத்தும் வரியை செலுத்துவதற்கு பொறுப்பாகவுள்ள மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து அவ் வரியை அறவிடுவதற்கும் அதனை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் செயற்பாடுகள் ரூபா 108,980,219 மிகையை விளைவித்திருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 82,968,314 ஆக இருந்தமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 26,011,905 ஆன முன்னேற்றமொன்றைச் சுட்டிக்காட்டுகின்றது. நிலையான வைப்புகளிலிருந்தான வருமானம் ரூபா 37,363,019 தொகையால் அதிகரித்தமை மேற்படி முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக பங்களித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

நிர்மாண ஒப்பந்தங்களை பொறுப்பேற்கும் போது பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிற்கு உத்தரவாதங்களை வழங்குதல் நிதியத்தின் பிரதான நோக்கமாக உள்ளது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் போது அவ் இலக்குகளை அடைந்து கொள்வதற்காக எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் மற்றும் பொறுப்பான உத்தியோகத்தர்கள் நிதியத்தால் நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் கணக்காய்வின் போது நிதியத்தின் செயலாற்றலை மதிப்பீடு செய்ய முடியாதிருந்தது. எவ்வாறாயினும் பிரதான நடவடிக்கைகளின் உள்ளபடியான அடைதல்கள் கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருந்தன. அதற்கிணங்க மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் வழங்கப்பட்ட பிணை முறிகளின் எண்ணிக்கை முறையே 2,105 மற்றும் 2,927 ஆக காணப்பட்டன.


### 4.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 தொடக்கம் 2016 வரையான காலப்பகுதியின் போது வழங்கப்பட்ட 26 பிணை முறிகள் மற்றும் உத்தரவாதங்களை பெற்றிருந்த ஒப்பந்ததாரர்களின் மந்தமான செயலாற்றல் காரணமாக அப் பிணைமுறிகள் மற்றும் உத்தரவாதங்கள் சார்பில் வாடிக்கையாளரிற்கு ரூபா 79,711,701 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் உரிய ஒப்பந்ததாரர்களிடமிருந்து இத் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் ரூபா 668,102,130 மொத்தப் பெறுமதியான பிணை முறிகள் மற்றும் உத்தரவாதங்கள் நாடளாவிய ரீதியிலுள்ள மாவட்டங்களிற்கிடையே வழங்கப்பட்டிருந்தன. அதில் 22.98 சதவீதம் கொழும்பு மாவட்டத்திலுள்ள ஒப்பந்ததாரர்களிற்கு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கிளிநொச்சி, வவுனியா, நுவரெலியா, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் கேகாலை போன்ற 06 மாவட்டங்களிலுள்ள ஒப்பந்ததாரர்களிற்கு மொத்தப் பெறுமதியின் ஒரு சதவீதத்தை விடக் குறைவாக மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட அத்தகைய முறிகள் மற்றும் உத்தரவாதங்களின் விபரங்கள் பின்வரும் அட்டவணை மற்றும் வரைபு என்பவற்றில் தரப்பட்டுள்ளன.

| | **மாவட்டம்** | **முறிகளின் பெறுமதி** | |
|---|---|---|---|
| | | **ரூபா** | **சதவீதம்** |
| 01 | கொழும்பு | 153,528,650 | 22.98 |
| 02 | அனுராதபுரம் | 61,021,672 | 9.13 |
| 03 | மாத்தளை | 48,281,620 | 7.23 |
| 04 | பொலன்னறுவை | 41,696,149 | 6.24 |
| 05 | குருணாகலை | 37,695,915 | 5.64 |
| 06 | மட்டக்களப்பு | 37,003,487 | 5.54 |
| 07 | கம்பஹா | 36,043,580 | 5.39 |
| 08 | கண்டி | 30,012,305 | 4.49 |
| 09 | மாத்தறை | 29,181,362 | 4.37 |
| 10 | அம்பாந்தோட்டை | 26,943,099 | 4.03 |
| 11 | யாழ்ப்பாணம் | 25,819,105 | 3.86 |
| 12 | அம்பாறை | 22,900,275 | 3.43 |
| 13 | காலி | 22,530,705 | 3.37 |
| 14 | இரத்தினபுரி | 20,234,017 | 3.03 |
| 15 | திருகோணமலை | 16,220,398 | 2.43 |
| 16 | புத்தளம் | 14,621,482 | 2.19 |
| 17 | களுத்துறை | 13,806,873 | 2.07 |
| 18 | பதுளை | 8,068,800 | 1.21 |
| 19 | மொனராகலை | 6,994,067 | 1.05 |
| 20 | கிளிநொச்சி | 6,591,655 | 0.99 |
| 21 | வவுனியா | 5,803,000 | 0.87 |
| 22 | நுவரெலியா | 1,770,900 | 0.27 |
| 23 | முல்லைத்தீவு | 697,200 | 0.10 |
| 24 | மன்னார் | 362,614 | 0.05 |
| 25 | கேகாலை | 273,200 | 0.04 |
| | **மொத்தம்** | **668,102,130** | |




## 4.3 முகாமைத்துவச் செயற்பாடுகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொதுத் திறைசேரியிடமிருந்து முறையான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் ஊழியரொருவரிற்கு ரூபா 500,000 தொகையான ஆகக் கூடிய மீள்நிரப்பலொன்றின் கீழ் ஊழியர்கள் மற்றும் அவர்களின் 03 ஏனைய குடும்ப உறுப்பினர்களிற்கான மருத்துவத் திட்டம் ஒன்றிற்காக 2013 ஆகஸ்ட் 02 இல் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் நிதியத்தின் ஊழியர்களிற்கு ரூபா 1,474,909 ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ஊக்குவிப்புத் திட்டத்திற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) ஊக்குவிப்புக் கொடுப்பனவு கணிப்பீடு செய்யப்பட்ட முறை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமாப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) ஊக்குவிப்புக் கொடுப்பனவிற்கு முன்னர் செயலாற்றல் தொடர்பான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.4 சர்ச்சைத் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் நோக்கங்களை மீறி மீளாய்வாண்டின் போது தனியார் கம்பனியொன்றிற்கு ரூபா 97 மில்லியன் கடன் வழங்கப்பட்டிருந்தது. மேலும் இது தொடர்பாக பொதுத் திறைசேரியிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டிருக்காததுடன் இக் கடனின் மீள்கொடுப்பனவுகள் தொடர்பாக மேற்படி கம்பனியுடன் உடன்படிக்கை எதுவும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

மேற்படி கடனில் ரூபா 60,565,177 மற்றும் ரூபா 10,411,450 பெறுமதியான காசோலைகள் முறையே அத் தனியார் கம்பனியின் 42 வழங்குநர்கள் மற்றும் 16 தனிப்பட்ட கணக்குகளின் பெயரில் எழுதப்பட்டிருந்தன.

(ஆ) 2009 ஆம் ஆண்டின் போது அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனத்திற்கு (எஸ்டி&சீசீ) ரூபா 100 மில்லியன் கடன் வழங்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 79.2 மில்லியன் கூட்டுமொத்த தொகை மூலதன பகுதியாக எஸ்டி&சீசீ ஆல் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எஸ்டி&சீசீ இடமிருந்து பெற வேண்டிய ரூபா 93.51 மில்லியன் வட்டி காணப்பட்ட போதிலும் இவ் அறிக்கைத் திகதி வரையிலும் கடன் மீதான வட்டி எதுவும் பெறப்பட்டிருக்கவில்லை.

நிதியத்தின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரால் வழங்கப்பட்ட 2018 பெப்ரவரி 07 ஆம் திகதிய எம்எவ் - 0046 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் நிதியத்திற்கு ரூபா 114.31 மில்லியன் தொகையை (ரூபா 20.8 மில்லியன் மூலதன பகுதி மற்றும் ரூபா 93.5 மில்லியன் வட்டி) உடனடியாக தீர்ப்பனவு செய்யுமாறு எஸ்டி&சீசீ இடம் வேண்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் பொதுத் திறைசேரியிடமிருந்து முறையான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் 2015 யூன் 04 இல் நிதியத்தின் முகாமைத்துவ சபையால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் கணக்குப் புத்தகங்களிலிருந்து ரூபா 20.8 மில்லியன் நிலுவை மூலதன பகுதி பதிவளிக்கப்பட்டிருந்தது. அதே நேரம் ரூபா 114.31 மில்லியன் மொத்த நிலுவை 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எஸ்டி&சீசீ இன் நிதிக்கூற்றுக்களில் நிதியத்திற்குச் செலுத்த வேண்டியவைகளாக காட்டப்பட்டிருந்தன.

## 4.5 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 யூலை 08 ஆம் திகதிய பிஈடி/பியூ ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைக் கடிதத்தின் பிரகாரமும் 2006 செப்தெம்பர் 22 ஆம் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைக்கு இணங்கவும் அனைத்து நியதிச் சட்ட நிறுவனங்களும் தமது நிறுவனக் கட்டமைப்பை மீளமைக்க வேண்டியிருந்ததுடன் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டங்கள், பதவியணியினர் மற்றும் சம்பள அளவுகள் என்பன திருத்தப்பட்டு தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவினது பரிந்துரைகள் மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் என்பவற்றை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதியமானது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து தேவையான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் ஒப்பந்த அடிப்படையில் (வெளி முலங்கள்) 6 உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்திருந்ததுடன் அவ் உத்தியோகத்தர்களில் ஒரு உத்தியோகத்தரிற்கு மாத்திரம் உடனடிக் காரணங்களின்றி வாழ்க்கைச் செலவுப் படிகள் மற்றும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தன.

(இ) நிதியமானது அதன் பதவியணியினரிற்கு வருடாந்த சம்பள ஏற்றங்களை வழங்குவதற்காக முறையான பொறிமுறை ஒன்றை அறிமுகப்படுத்தியிருக்கவில்லை. இதன் விளைவாக மீளாய்வாண்டின் போது அவர்களின் சம்பளங்கள் மற்றும் கூலிகளில் 0.21 சதவீதம் தொடக்கம் 12 சதவீதம் வரையான வீச்சில் வருடாந்த சம்பள ஏற்றங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(ஈ) 60 வருட வயதை விஞ்சிய உத்தியோகத்தரொருவர் 2011 ஏப்ரல் 29 ஆம் திகதிய 60 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு முரணாக நம்பிக்கைப் பொறுப்பளர் சபையின் அங்கீகாரத்துடன் நிரந்தரப் பதவியணியினரொருவராக வேலையிலீடுபடுத்தப்பட்டிருந்தார்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 133 மற்றும் 2009 யூன் 09 இன் டிஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்காததுடன் அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவினாலும் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 5.2 கணக்காய்வுக் குழுக்கள்

2003 யூன் 02 இன் பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் எதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் நிதியத்தின் உத்தியோகத்தர்கள் அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களுக்கும் சமூகமளித்திருக்கவில்லை.

### 5.3 ஆண்டறிக்கைகளை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம் 2002 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான தொகைகளிற்கிடையே குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டிருந்தமையால் பாதீடானது ஆக்கபூர்வமான ஒரு முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் நிதியத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுப் பரப்புக்களும் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) பதவியணியினர் நிர்வாகம் | ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டங்கள், பதவியணியினர் மற்றும் சம்பள அளவுகளை திருத்தியமைப்பதன் மூலம் தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் என்பன பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | நிதி முகாமைத்துவம் | நிலையான வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டியல்களில் திறைசேரிச் செயலாளரின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |